# தலைமைத் தேர்தல் ஆணையரை கைது செய்ய வேண்டும்!

## மேற்கு வங்க முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி ஆவேசம்!



கொல்கத்தா, செப். 25 -

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்) தொடர்பாக சக தேர்தல் ஆணையர்கள் எழுதிய கடித விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ள நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை கைது செய்ய வேண்டும் என திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைய உறுப்பினர்களிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் குறித்த தகவல்களைத் தொடர்ந்து, ஆணையத்தின் மீதான எதிர்க்கட்சிகளின் விமர்சனத்தை தீவிரப்படுத்தியுள்ள மம்தா பானர்ஜி, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை கைது செய்ய வேண்டும் என்றும், மேற்கு வங்காளம் மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தப் பணிக்கு (SIR) பிறகு பா.ஜ.க. வெற்றி பெற்ற பிற மாநிலங்களிலும் புதிய சட்டப்பேரவை தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

மேலும் வங்காள சட்டமன்றத் தேர்தலை பா.ஜ.க.வும், தேர்தல் ஆணையமும் சூறையாடியது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

### ஞானேஷ் குமாரை கைது செய்து

# தேசத் துரோக வழக்கின் கீழ் விசாரிக்க வேண்டும்!

## ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் கோரிக்கை!



புதுடெல்லி, செப்.25 –

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை உடனடியாகக் கைது செய்து, தேசத் துரோக வழக்கின்கீழ் விசாரி க்கப்பட வேண்டும் என்று டெல்லி முன்னாள் முதல்–மந்திரியும், ஆம் ஆத்மி கட்சி தலைவருமான அரவிந்த் கெஜ்ரிவால் வலியுறுத்தி உள்ளார்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் எஸ்.ஐ.ஆர். பணிகள் தொடர்பாக தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் கடந்த 10 மாதங்களில் குறைந்தது 14 முறை சில முடிவுகள் மற்றும் உத்தரவுகளுக்கு ஆட்சேபனை தெரிவித்ததாக தனியார் நாளிதழ் ஒன்றில் செய்திகள் வெளியாகியிருந்தன. வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை நீக்குவது, வாக்காளர் தரவுத்தளத்தை கையாள்வது உள்ளிட்ட விவகார ங்களில் அவர்கள் கேள்வி எழுப்பியதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இந்த விவகாரம் அரசியல்வட்டாரத்திலும் புயலை கிளப்பி உள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக செயல்பட்டதாக செய்திகள் வெளியானநிலையில், இதற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் கடுமை யான விமர்சன த்தை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் டெல்லி முன்னாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியதாவது:–

பிரதமர் மோடியும் அமித் ஷாவும் வாக்குகளை திருடி தேர்தலில் வெற்றி பெறுகிறார்கள் என்று இதுவரை கேள்விப்பட்டோம். இன்று வந்துள்ள செய்திகள் அதனை நிரூபித்துள் ளன. இதற்கு மூளையாக செயல்படுபவர் ஞானேஷ் குமார்தான்.

தேர்தல் ஆணையத்தை சர்வாதிகாரி போல் ஞானேஷ் குமார் நடத்துகிறார். தனது சக தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோரை புறக்கணித்துவிட்டு, தன்னிச்சையாக அதிகாரிகளுக்கு உத்தரவுகளை பிறப்பிக்கி றார்.

தலைமை தேர்தல் ஆணையர் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்து கைது செய்ய வேண்டும். டெல்லி, பீகார், மேற்கு வங்காளம் உள்ளிட்ட மாநிலங்களில் சமீபத்தில் நடந்த சட்டமன்ற தேர்தல்களை ரத்து செய்து மறு வாக்குப்பதிவு நடத்த வேண்டும்

தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமலே உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதாக கூறி, மற்ற இரண்டு தேர்தல் ஆணையர்களும் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு தொடர்ந்து கடிதங்களை எழுதியுள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல் பிறப்பிக்கப்படும் அனைத்து உத்தரவுகளும் சட்டவிரோதமானவை. ஒட்டுமொத்த SIR செயல்முறையும் சட்டவிரோதமானது. எனவே, அந்த SIR செயல்முறை முழுவதை யும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

குறிப்பிட்ட பகுதிக்கான தேர்தல் பதிவு அதிகாரிக்கு (ERO) மட்டுமே வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கவோ அல்லது நீக்கவோ அதிகாரம் உள்ளது. தேர்தல் பதிவு அதிகாரியின் இணையதள அணுகல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அவரது அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளதாகவும் இரு தேர்தல் ஆணையர்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

டெல்லியில் அமர்ந்திருக்கும் சிலருக்கு நாடு முழுவதுக்குமான வாக்காளர் பட்டியலை அணுகும் வசதி உள்ளது. அவர்கள் விரும்பும் நபர்களின் பெயர்களைப் பட்டியலில் சேர்க்கவோ அல்லது நீக்கவோ அவர்களால் முடியும்.

கடந்த மூன்றாண்டு களில் வாக்காளர் பட்டியலில் செய்யப்பட்ட அனைத்து மாற்றங்களையும் ரத்து செய்துவிட்டு, மூன்றாண்டு களுக்கு முந்தைய வாக்காளர் பட்டியலை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கையாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தலைமைத் தேர்தல் ஆணையரை சிறையில் அடைக்க வேண்டும்!

# தமிழ்நாடு, மகாராஷ்டிரா, மேற்கு வங்காளத்தில் மறு தேர்தல் நடத்த வேண்டும்!

## சிவசேனா கட்சித் தலைவர் உத்தவ் தாக்கரே வலியுறுத்தல்!



மும்பை, செப். 25 -

தலைமை தேர்தல் ஆணையரை உடனடியாக பணிநீக்கம் செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று மகாராஷ்டிர முன்னாள் முதல்-மந்திரியும், சிவசேனா (யுபிடி) கட்சியின் தலைவருமான உத்தவ் தாக்கரே வலியுறுத்தி உள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தன்னிச்சையாக செயல்பட்டதாக செய்திகள் வெளியானநிலையில், இதற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் மகாராஷ்டிர முன்னாள் முதல்-மந்திரி உத்தவ் தாக்கரே செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியதாவது:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையரை உடனடியாக பணிநீக்கம் செய்து சிறையில் அடைக்க வேண்டும். ஞானேஷ் குமாரின் செயல்பாடுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்ததற்காக தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷிக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவரின் உண்மையான முகம் தற்போது வெளியே வந்துள்ளது. தேர்தல் ஆணையம் எடுத்த அனைத்து தவறான முடிவுகளையும் அந்த இரு தேர்தல் ஆணையர்களும் ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

**வாக்குச் சீட்டு முறையில் தேர்தல்!**

நீதிமன்றமும் இந்த விவகாரத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டின் ஜனநாயகத்தைக் காக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். மகாராஷ்டிரா, மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்களில் அதிகார வெறிக்காக இதுபோன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன. எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்குப் பிறகு தேர்தல் நடைபெற்ற மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஏற்கெனவே நடைபெற்ற சட்டசபை தேர்தல்களை ரத்து செய்துவிட்டு, அந்த மாநிலங்களில் வாக்குச்சீட்டுகளை பயன்படுத்தி மறுதேர்தல் நடத்த வேண்டும். நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பாற்ற மீண்டும் வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மக்களின் வாக்குக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்”

இவ்வாறு அவர் கூறினார்.

### கழக வேட்பாளர் இ.பரந்தாமனை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்திட

# ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் தீவிரப் பணியாற்ற வேண்டும்!

## ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி வேண்டுகோள்!

திருவள்ளூர் செப் 25 -

மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலை முன்னிட்டு, தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைந்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களின் ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் மதுராந்தகம் தொகுதிக்கு உட்பட்ட பெரும்பேர்கண்டிகையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி பேசுகையில்: மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை வெற்றி பெறச் செய்யும் வகையில், ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் அனைவரும் இரவு-பகல் பாராமல் களப் பணியாற்றிட வேண்டும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பொதுமக்களுக்குச் செய்யப்பட்ட சாதனைகளையும், குறிப்பாக ஆதிதிராவிட மக்களின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களையும் வீடு வீடாக எடுத்துரைத்து வாக்குச் சேகரி ப்பில் ஈடுபட வேண்டும். உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளைப் பெற்று, கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யும் வகையில் தேர்தல் பணி களைத் தீவிரப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் அவர் பேசுகையில், அ.தி.மு.க. சார்பில் அண்மையில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர், தமிழக வெற்றிக் கழகத்தின் தூண்டுதலின் பேரில் தனது பதவியை ராஜினாமா செய்து, அக்கட்சிலே இணைந்து தற்போது அதே கட்சியின் சார்பில் வேட்பாளராக போட்டியிடுகிறார் பொதுமக்களை ஏமாற்றி அவர் நம்பிக்கை துரோகம் செய்த த.வெ.க. வேட்பாளருக்கு டெபாசிட் கூட கிடைக்காத வகையில் களப்பணியாற்றி!” திராவிட முன்னேற்றக் கழகத்தில் வேட்பாளரின் வெற்றிக்கான பணிகளை வேகப்படுத்த வேண்டும் என பல்வேறு ஆலோசனைகளை ஆ.கிருஷ்ண சாமி வழங்கினார்.இதில் நிர்வாகிகள் அமுல் பொன்மலர், வி பி ராஜன், புஷ்பராஜ், சிவாக்குமார், உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.




நாடு தழுவிய தொ.மு.ச. பேரவையின் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிவுரையின்படி மயிலாடுதுறை மாவட்டம் தொமுச சார்பில் 22.09.2026 செவ்வாய்க்கிழமை மாவட்டத்தலைவர் பொன்.நக்கீரன் தலைமையில் மயிலாடுதுறை தபால் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கவுன்சில் செயலாளர் வீரமணி மாவட்ட பொருளாளர் எம்.காமராஜ் மற்றும் மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள் அனைத்து இணைப்புச் சங்க நிர்வாகிகளும், காவிரிடெல்டா விவசாயசங்கராஜாராமன், மதியழகன், நெய்வேலிதொ.மு.ச. செயலாளர் சீனிவாசன் , மாநில தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையின் செயலாளர் வி. குருநாதன் அவர்கள்,பேரவைசெயலாளர் சு.பத்மநாபன் ஆகியோர்கலந்துகொண்டு கண்டன உரை நிகழ்த்தினார்கள். இறுதியில் மாவட்ட கவுன்சிலர் எம்.வீரமணி நன்றி தெரிவித்தார்.

### சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!


## (22.09.2026)



பொன்னேரி அரசு மருத்துவமனையில் பெண் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொல்ல முயற்சித்த த.வெ.க. நிர்வாகி பிரகாஷ் என்பவரை போலீசார் சுட்டுப்பிடித்தனர்.

திருப்பூரில் பனியன் ஆலையில் டெய்லராக பணிபுரிந்து வந்த இசக்கி ராஜா என்பவர் படுகொலை; நிறுவனத்தில் உள்ள ஜெனரேட்டர் மீது ரத்த காயங்களுடன் சடலமாக கண்டெடுப்பு.

கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் அருகே தென்னந்தோப்பில் அடையாளம் தெரியாத பெண் சடலம் அழுகிய நிலையில் மீட்பு; கடந்த சில தினங்களுக்கு முன்பு இரணியல் அருகே உள்ள குளத்தில் இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை.



தர்மபுரியில் பீடி வாங்குவதில் ஏற்பட்ட தகராறில் சுமைதூக்கும் தொழிலாளி முருகேசனுக்கு கத்திகுத்து; படுகாயங் களுடன் அரசு மருத்துவமனையில் அனுமதி.

திருப்பத்தூர் அருகே மாமூல் கேட்டு த.வெ.க. நிர்வாகி மிரட்டு வதாக சமூக ஆர்வலர் குற்றச்சாட்டு.



ஆவடி கன்னிகா புரத்தில் பட்டப்பகலில் மூதாட்டியின் வீட்டின் பூட்டை உடைத்து கொள்ளை.

மயிலாப்பூரில் இருசக்கர வாகனத்துடன் நின்று கொண்டிருந்த பெண்ணின் செல்போனை பறித்துக் கொண்டு தப்பிய 2 நபர்கள் கைது.

திருமங்கலம் பகுதியில் லிப்ட் கொடுப்பதாக இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று கத்தியை காட்டி மிரட்டி செல்போன் பறித்துச் சென்ற வழக்கில் சரித்திர பதிவேடு குற்றவாளி கைது.

திருச்சி திருவெறும்பூர் அருகே வேலாயுதங்குடியில் பட்டப் பகலில் அடுத்தடுத்து இரண்டு வீடுகளின் பூட்டு உடைக்கப்பட்டு 19 சவரன் நகை மற்றும் 2 லட்சம் ரூபாய் ரொக்கம் கொள்ளை :



முடிச்சூரில் தொடர் கொள்ளை ஆவின் பாலகத்தில் ரூ. 25,000 கொள்ளை.

தேனாம்பேட்டை பகுதியில் வீட்டில் சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்து, தட்டி கேட்ட நபரை கட்டையால் தாக்கிய சரித்திர பதிவேடு பெண் குற்றவாளி கைது.



காசிமேடு பகுதியில் ஒருவரை கத்தியால் தாக்கி, கொலைமுயற்சியில் ஈடுபட்ட 6 இளஞ்சிறார்கள்